Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 2 (2017), Pages 47-59 / ISSN: eISSN 2590-3691

# செய்தி தயாரிப்புச் செயலி வழி மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்துதல்

# USAGE OF THE NEWS MAKER SOFTWARE IN IMPROVING STUDENTS' READING SKILL

**அர்ஜுனன் பெருமாள் [1] / Arjunan Perumal [1]**

[1]கோத்தா மாசாய் இடைநிலைப்பள்ளி, ஜொகூர், மலேசியா. / Kota Masai Secondary School, Johor, Malaysia.

மின்னஞ்சல் / Email: arjuna_shal08@yahoo.com

**Abstract**

In today's world of constant technological advancement, the lifestyle and needs of the humans are ever-changing. Therefore, it is important to implement new teaching and learning techniques relevant to this technological era. Nowadays, it is seen that the reading skills among students are deteriorated. Due to this situation, the students may undergo many reading problems. In order to solve this issue, there is a need for an appropriate solution. Those problems were looked upon and solved in this research. This research was carried out on the Form 2 students' reading problems which was gradually solved by the use of 'News Maker' software program. This research was conducted using a mixed-method approach. Sample participants of 15 students were involved in this study. Those 15 students were divided into three groups. 5 of them were grouped as the control group while another 5 of the students were the taken as the treatment group. The remaining 5 students, who were highly proficient with no apparent reading problems, were discarded from the research study. The study itself was carried out throughout a period of 2 months. This research was carried out in SMK Taman Jasmin 2 located in Kajang, Selangor. The research method for this study includes pre and post testing, semi-structured interviews and observations. This research had shown significant improvement on the reading skills of the Form 2 students.

**Keywords**: News Maker , Reading Problems, Mixed Method, Learning Techniques, Reading Skills

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 2 (2017), Pages 47-59 / ISSN: eISSN 2590-3691

**ஆய்வுச் சாரம்**

விரைவான தொழில்நுட்ப மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் எதிர்நோக்கி வரும் உலகில் மாந்தனின் வாழ்க்கை முறையும் தேவைகளும் மாறிவருகின்றன. ஆகையால், கற்றல் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகளைக் கையாலுவதும் காலத்தின் கட்டாயமாகும். இன்றையச் சூழலில் இடைநிலைப்பள்ளி மாணவர்களிடையே வாசிப்புத் திறனானது மிகவும் குன்றியே காணப்படுகிறது. இதனால் அவர்கள் பல சிக்கலுக்கு ஆளாகுகின்றனர். எனவே, இச்சிக்கலைக் களைய ஒரு தீர்வு தேவைப்படுகின்றது. அந்தச் சிக்கல் ஓர் ஆய்வின் மூலம் களையப்பட இருக்கின்றது. இடைநிலைப்பள்ளிப் படிவம் இரண்டு மாணவர்களின் வாசிப்பில் தென்படும் சிக்கல்களைக் கண்டறிவதற்கும் செய்தி தயாரிப்புச் செயலி (NewsMaker) மூலம் இச்சிக்கலைக் களைவதற்கும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு, கலப்பு முறையைக் கொண்டு கையாளப்பட்டது. ஆய்வு மாதிரியாக 15 மாணவர்கள் பங்கேற்றார்கள். 15 மாணவர்கள் மூன்று குழுக்களாகப் பகுக்கப்பட்டு 5 மாணவர்கள் கட்டுக்கு உட்படுத்தபட்டும், இன்னும் 5 மாணவர்கள் கட்டுக்கு உட்படுத்தப்படாத மாணவர்களும், இறுதி ஐந்து மாணவர்கள் மேல்நிலயிலும் இருந்தனர். இவ்வாய்வனது சுமார் இரண்டு மாதக் கால அவகாசத்தில் நடத்தப்பட்டது. இவ்வாய்வு தாமான் ஜாஸ்மீன் 2 இடைநிலைப்பள்ளி காஜாங் சிலாங்கூரில் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில் முன்னறித் தேர்வு, பின்னறித் தேர்வு, நேர்காணல், உற்றுநோக்கல் போன்ற உத்திகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வு படிவம் இரண்டு மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்தியது என உறுதியளிக்கப்பட்டுள்ளது.

**கருச்சொற்கள்:** செய்தி தயாரிப்பு செயலி, வாசிப்புத் திறன், கலப்பு முறை, வாசிப்பு சிக்கல்,கற்றல் கற்பித்தல் அணுகுமுறை

Muallim Journal of
Social Science and Humanities

## முன்னுரை

மலேசிய நாட்டின் கல்வி வளர்ச்சியானது நாட்டின் பொருளாதர வளர்ச்சியையும் அதன் நிலைத்தன்மையும் நிலைநிறுத்த முக்கியப் பங்கு வகிக்கின்றது. ஒரு வகுப்பறையில் நடைப்பெறும் கற்றல் கற்பித்தலானது நாட்டின் எதிர்கால வளர்ச்சியை நிர்ணயிக்கும் ஊன்றுக்கோலாக விளங்குகிறது (தேசியக் கல்வித் தத்துவம், கல்வித் திட்ட மேம்பாட்டுப் பிரிவு, கல்வி அமைச்சு,1988)[1]. மலேசியக் கல்வியானது இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல் எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மீகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து சமன்நிலையும் இயைபும் பெற தனி மனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும். இம்முயற்சியானது அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுக் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும், செழிப்பையும் நல்கும் மலேசியரை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும் (தேசியக் கல்வித் தத்துவம், கல்வித் திட்ட மேம்பாட்டுப் பிரிவு, கல்வி அமைச்சு,1988)[1].

2012-ஆம் ஆண்டு மலேசியக் கல்வி அமைச்சால் வெளியிடப்பட்ட மலேசியக் கல்வி மேம்பாட்டுத் திட்டம் 2013-2025 (BLUE PRINT) மாணவர்களின் கல்வி மேம்பாட்டில் 7-ஆம் படிநிலையாக உள்ள கூற்றில் தகவல் தொழில்நுட்பம் மிக முக்கியக் கூறாக அமைகின்றது. இச்சூழலில் மாணவர்களினால் பாட உள்ளடக்கத்தை மேலும் விரிவாகவும், சுவரசியமான தொடர்பு முறையிலும் கற்க இயலும் (மலேசியக் கல்வி அமைச்சு, 2012)[2]. தொடர்ந்து, மொழி கற்றல் கற்பித்தலில் ஒரு முக்கியப் பிரிவாக அமைவது வாசிப்பாகும். "ஓதுவ தொழியேல்" என்னும் ஔவை மூதாட்டியின் வாக்கை எண்ணுக (கணபதி, 2007)[3.], கையெழுத்தில் அல்லது அச்செழுத்தில் உள்ளதைக் கண்ணால் பார்த்து வாயால் உச்சரித்துச் சொல்லிப் பொருள் உணர்வதை வாசித்தல் என்கின்றோம். வரிவடிவத்தில் உள்ள சொற்களை ஒலி வடிவமாக மாற்றி உச்சரிக்கும் உறுப்புகளும் சொற்களை நோக்கும் கண்களும் ஒத்துழைத்தால்தான் வாசிப்புச் சரியாக நடைப்பெறும். எனவே, வாசித்தலில் சொற்களைக் காணல், உச்சரித்தல், பொருள் உணர்தல் என மூன்று கூறுகள் உள்ளன (சுப்புரெட்டியார், 2008)[4].

## ஆய்வு பின்னனி

மலேசியாவில் பிற மொழி மற்றும் தமிழ்மொழியின் பயன்பாட்டையும் அதன் தரத்தையும் மேம்படுத்த எண்ணி அரசாங்கம் (1979) அமைச்சரவை அறிக்கையை வரையறுத்தது. இவ்வறிக்கை தொடக்கப்பள்ளிகளுக்கான புதிய பாடதிட்டம் தோன்ற வழிவகுத்தது. இதன் மூலம் தமிழ்மொழி திறன்களான கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து என நான்கு கூறுகளும் கற்றல் கற்பித்தலில் இடம் பெற இது வலியுறுத்தியது. அதற்கேற்ப தமிழ்மொழிக்கும் ஓர் அரிய பாடத்திட்டம் உருவானது.

இந்நிலையில் பள்ளிகளில் மொழி கற்பித்தலில் பாடங்களில் கேட்டல்-பேச்சுத் திறன்களுக்கு அடுத்து மிக முக்கியமாகக் கருதப்படுவது வாசித்தல். வாசித்தலில் மூன்று மிக முக்கியக் கூறுகளாகக் கருதப்படுவது காணல், நினைவு கூர்தல், பொருள் புரிதல் ஆகிய அங்கங்களாகும். வாசித்தலில் கண்கள் வரிவடிவங்களை நோக்க, மனம் உணர்கின்ற பொழுது பார்த்தல், ஒலித்தல், பொருளுணர்தல் என்ற மூன்று வேலைகள் நடைப்பெறுகின்றன. இவை நடைப்பெற உள்ளம், கண், காது, மூக்கு, நாக்கு, குரல் உறுப்புகள் அனைத்தும் ஒத்துழைக்க வேண்டிய நிலை வாசித்தலுக்கு மட்டுமே உண்டு. எனவேதான், வாசித்தல் மிக முக்கியமான திறனாகக் கருதப்படுகின்றது. முதலில் மாணவர்கள் வாசிப்பதற்குக் கற்றுத் தர வேண்டும், அதன் பின்னரே கற்பதற்கும் வாசித்தல் என்னும் சூழலுக்குக் கொண்டு செல்ல வேண்டும். பள்ளிகளில் மாணவர்கள் வாசித்தலுக்கு முதல் இடம் கொடுப்பதில்லை. இதனால் அவர்களின் மொழி அளுமையும் அதனைப் பேசும் சூழலும் குறைகின்றது. வாசிப்புக் குறைவாகக் கையாளுவதால் மாணவர்கள் நிறைய எழுத்துப் பிழைகள், கருத்துப் பிழைகள் மற்றும் மொழி பயன்பாட்டில் சொற்களஞ்சிய குறைப்பாட்டினை ஏதிர்நோக்குகின்றனர். மாணவர்களின் வாசிப்பில் ஏற்படும் இச்சிக்கலையே ஆய்வாளர் அவரது நோக்கமாகக் கொண்டு செய்தி தயாரிப்புச் செயலி என்னும் மென்பொருளின் வழி எவ்வாறு அச்சிக்கலைக் களைவது என்ற அணுகுமுறைகளைக் கண்டறிந்துள்ளார்.

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 2 (2017), Pages 47-59 / ISSN: eISSN 2590-3691

### ஆய்வு நோக்கம்

i) மாணவர்கள் வாசித்தலில் எதிர்கொள்ளும் சிக்கலின் காரணத்தைக் கண்டறிதல்.
ii) மாணவர்கள் வாசித்தலில் எதிர்கொள்ளும் சிக்கலை செய்தி தயாரிப்புச் செயலி கொண்டு களைதல்.

### ஆய்வு வினா

i) மாணவர்கள் வாசித்தலில் எதிர்கொள்ளும் சிக்கலின் காரணங்கள் யாவை?
ii) மாணவர்கள் வாசித்தலில் எதிர்கொள்ளும் சிக்கலை செய்தி தயாரிப்புச் செயலி களைய உதவுமா?

### முந்தைய ஆய்வுகள்

2004 ஆம் ஆண்டில், சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஹனி மெர்லியாநா முஸ்தாபா என்னும் ஆய்வாளர், "முதலாம் ஆண்டின் பையப்பயிலும் மாணவர்களிடத்தில் ஆசிரியர் கற்றல் கற்பித்தலில் பாடத்துணைப்பொருளாகப் பல்லூடகத்தைப் பயன்படுத்தி வாசிப்புத் திறனை மேம்படுத்துதல்" என்ற தலைப்பில் ஆய்வை மேற்கொண்டார். ஆய்வாளர் தரவுகளைத் திரட்ட உற்று நோக்கல், வினா நிரல், நேர்காணல் மற்றும் வாசிப்புச் சோதனையையும் ஆய்வின் கருவியாகப் பயன்படுத்தப்பட்டது.


இவ்வாய்வில் பல்லுடகமாக, பட அட்டை, வாசிப்பு அட்டை, எழுத்து அட்டை, சொல் அட்டை போன்றவையை ஆய்வாளரால் பயன்படுத்தப்பட்டது. பகாங் மாநிலத்தில் உள்ள ஒரு தொடக்கப்பள்ளியில் 60 மாணவர்கள் இவ்வாய்விற்கு உட்படுத்தப்பட்டனர். ஆய்வின் முடிவின்படி பல்லூடகத்தை ஆசிரியர் பாடத்துணைப்பொருளாகப் பயன்படுத்தி வாசிப்புத் திறனை மாணவர்களிடத்தில் மேம்படுத்தப்பட்டது என ஆய்வாளர் கூறியுள்ளார் (Farahan Hani, 2000)[5].

இவ்வாய்விற்கும் தற்பொழுது செய்தி தயாரிப்புச் செயலியைக் கொண்டு செயல்படும் ஆய்வாளருக்கும் ஆய்வில் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் மாற்றம் காண்கின்றன. ஆய்வாளர் ஹனி மெர்லியாநா நிறைய வகையில் வாசிப்பு அட்டைகளை உருவாக்கியுள்ளர். ஆனால் இவ்வாய்வில் முதன்மையாக விளங்கப்படும் கருவியானது செய்தி தயாரிப்புச் செயலி எனப்படும் மென்பொருளாகும். மேலும் ஆய்வாளர் ஃபர்ஹனா தரவுச் சேகரிப்பு முறையில் கூடுதலாக ஒரு முறையைப் பயன்படுத்தியுள்ளார், அவை வினா நிரல் ஆகும். இவ்வாய்வில் முதன்மை நோக்கமே பையப்பயிலும் பயிலும் மாணவர்களைக் நோக்கிச் செல்கின்றது, ஆனால் செய்தி தயாரிப்புச் செயலி ஆய்வில் குறிப்பிட்ட இரண்டாம் படிவத்தில் அனைத்து நிலை

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 2 (2017), Pages 47-59 / ISSN: eISSN 2590-3691


மாணவர்களையும் கொண்டு ஆய்வு நடத்தப்பட்டது. மாணாவர்களின் எண்னிக்கையும் இவ்விரு ஆய்வுகளிலும் மாற்றம் காண்கின்றது.

**ஆய்வு வடிவமைப்பு**




அட்டவணை 1: ஆய்வின் வடிவமைப்பும் செயல்முறையும்

**பகுப்பாய்வு**





குறிவரைவு 1 : செய்தி தயாரிப்புச் செய்தி பயன்பாட்டிற்கு முன்பு உள்ள மாணவர்களின் வாசிப்பு அடைவுநிலை.

குறிவரைவு 1 : முன்னறித் தேர்வின் மாணவர்கள் அடைவுநிலை முடிவுகள்

நனிநன்று என்னும் நிலையில் மொத்தம் ஐந்து மாணவர்கள் பகுக்கப்பட்டனர். அவர்களில் அனைவரும் 30 - 21 என்ற பகுப்பில் இருந்தனர். அவர்களில் ஒருவருக்கு 25, மற்றும் இருவருக்கு 23, மீதம் உள்ள இருவருக்கு 21 மதிப்பெண் கிடைத்திருந்தது. இரண்டாவது நிலையில் உள்ள 20 - 11 என்ற பகுப்பில் மொத்தம் எட்டு மாணவர்கள் பகுக்கப்பட்டனர். அவர்களுள் 23 மதிப்பெண் பெற்றவர் ஒருவர், 20 மதிப்பெண் பெற்றவர் ஒருவர், 19 மதிப்பெண் பெற்றவர் ஒருவர், 16 மதிப்பெண் பெற்றவர் மூவர், 15 மதிப்பெண்கள் பெற்றவர் ஒருவர் மற்றும் 13 மதிப்பெண்கள் பெற்றவர் ஒருவர். இறுதியாக திருப்திக் குறைவு என்ற நிலையில் மொத்தம் இரண்டு மாணவர்கள் அவர்களின் மதிப்பெண்களுக்கு ஏற்ப பகுக்கப்பட்டனர். அவர்களுள் ஒருவருக்கு 11 மதிப்பெண்களும் மற்றொருவர் 6 மதிப்பெண்களும் பெற்றிருந்தனர்.

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 2 (2017), Pages 47-59 / ISSN: eISSN 2590-3691





குறிவரைவு 2 : ஆய்வுக்குட்படுத்தபட்ட மாணவர்களின் முதல் வாசிப்பு அடைவுநிலை முடிவுகள்

குறிவரைவு 2: முதல் வாரம் ஆய்வுக் குழுவின் பின்னறித் தேர்வின் முடிவுகள்

மேற்காணும் குறிவரைவு, மாணவர்களின் முன்னறித் தேர்வின் அடைவு நிலையையும் பின்னறித் தேர்வின் அடைவு நிலையையும் மிக விரிவாகக் விளக்கியுள்ளது. முதல் வாரத்தில் இவ்வனைத்து மாணவர்களின் வாசிப்பின் நிலைகளும் மாற்றம் அடையவில்லை என்றாலும் கூட, ஆய்வுக்குட்பட்ட மாணவர்கள் அனைவரும் மதிப்பெண் வகையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர். மாணவன் 1 முன்னறித் தேர்வில் பதினைந்து மதிப்பெண்களும் பின்னறித் தேர்வில் பதினெழு மதிப்பெண்களும் பெற்றான். மாணவன் 2 முன்னறித் தேர்வில் பதினாறு மதிப்பெண்களும் பின்னறித் தேர்வில் பதினெட்டு மதிப்பெண்கள் என்னும் நிலைக்கு மாற்றம் கண்டுள்ளது. மாணவன் 4 - இன் முன்னறித் தேர்வு மதிப்பெண்கள் 19-ஆகவும் பின்னறித் தேர்வில் இருபது மதிப்பெண்களாகவும் கிடைக்கப்பெற்றது. இதனைத் தொடர்ந்து மாணவன் 7 பதினொன்று என்னும் மதிப்பெண்ணில் இருந்து பின்னறித் தேர்வில் பதிமூன்று மதிப்பெண்களைப் பெற்றான். இறுதியாக மாணவன் 9 இடம் ஒரு மதிப்பெண்கள் சிறு நிலையில் மாற்றம் கண்டது. அதாவது முன்னறித் தேர்வில் ஆறு மதிப்பெண்களையும் பின்னறித் தேர்வில் 9 மதிப்பெண்களில் ஒரு சிறு மதிப்பெண் ஏற்றம் கண்டிருப்பதைக் காணலாம்.


Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 2 (2017), Pages 47-59 / ISSN: eISSN 2590-3691




குறிவரைவு 3 : கட்டுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களின் முதல் வாசிப்பு அடைவுநிலை முடிவுகள்

குறிவரைவு 3 : முதல் வாரம் கட்டுக்குட்படுத்தப்பட்டக் குழுவின் பின்னறித் தேர்வின் முடிவுகள்

மேற்காணும் குறிவரைவு, ஒரு வாரக் கால ஆய்விற்குப் பின்னர் மாணவர்களிடையே தமிழ்மொழியின் வாசித்தலில் எந்தவித மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை என்பதைப் புலப்படுத்துகின்றது. குறிவரைவின் வாயிலாக நாம் முன்னறித் தேர்வின் முடிவும் பின்னறித் தேர்வின் முடிவும் சமநிலையில் இருப்பதைக் காணமுடிகின்றது. ஆக அவ்விரண்டு நிலைகளான நன்று மற்றும் நனிநன்று என்ற பகுப்பில் இருந்து மாணவர்கள் மாற்றம் காணவில்லை என்பதையும் குறிவரைவு தெளிவுர உணர்த்தியுள்ளது.





குறிவரைவு 4 : ஆய்வுக்குட்படுத்தபட்ட மாணவர்களின் இரண்டாம் வாரம் வாசிப்பு அடைவுநிலை முடிவுகள்

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 2 (2017), Pages 47-59 / ISSN: eISSN 2590-3691

குறிவரைவு 4 : இரண்டாம் வாரம் ஆய்வுக் குழுவின் பின்னறித் தேர்வின் முடிவுகள்

குறிவரைவு 4, இரண்டாம் வாரம் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களின் முன்னறித் தேர்வு மற்றும் பின்னரித் தேர்வின் அடைவுநிலைகளை மிகத் தெளிவாக விளக்கியுள்ளது. இரண்டாம் வாரத்தில் திருப்தி குறைவு என்னும் நிலையில் இருந்த மாணவர் 9 நன்று நிலைக்கும், நன்று என்னும் நிலையில் இருந்த மாணவர் 4 நனிநன்று படிநிலைக்கும் மாற்றம் மாறியுள்ளனர். மேலும் மாணவர் 1,2 மற்றும் 7 மதிப்பெண் நிலைகளில் மாற்றம் கண்டு அதே நன்று என்னும் படிநிலைகளில் தங்களை தக்க வைத்துக் கொண்டுள்ளனர். மாணவர் 9 ஒன்பது மதிப்பெண்களிலிருந்து பனிரெண்டு மதிப்பெண்களுக்கும், மாணவர் 4 இருபது மதிப்பெண்களிலிருந்து இருபத்து இரண்டு மதிப்பெண்களுக்கும், மாணவர் 1 பதினெழு மதிப்பெண்களிலிருந்து பதொண்பது மதிப்பெண்களுக்கும், மாணவர் 2 பதினெட்டு மதிப்பெண்களிலிருந்து பதொண்பது மதிப்பெண்களுக்கும், ஆக இறுதியாக மாணவர் 7 பதிமூன்று மதிப்பெண்களிலிருந்து பதினைந்து மதிப்பெண்களுக்கும் மாற்றம் கண்டுள்ளனர் என்பதனை அட்டவணை மற்றும் குறிவரைவு மூலம் அறிய முடிகின்றது. இரண்டாம் வாரத்திற்கு பின்னர் நனிநன்று நிலையில் ஒரு மாணவரும், நன்று நிலையில் நான்கு மாணவர்களும், திருப்தி குறைவு என்னும் நிலையில் எந்த ஒரு மாணவர்களும் இல்லாதிருப்பதையும் அட்டவணை மிகத் தெளிவாக விவரிக்கின்றது.





குறிவரைவு 5 கட்டுக்குட்படுதப்பட்ட மாணவர்களின் இரண்டாம் வாரம் வாசிப்பு அடைவுநிலை முடிவுகள்:

குறிவரைவு 5 : இரண்டாம் வாரம் கட்டுக்குட்படுத்தப்பட்டக் குழுவின் பின்னறித் தேர்வின் முடிவுகள்

மேற்காணும் குறிவரைவு, இரண்டாம் வாரம் கட்டுக்குட்படுத்தப்பட்டக் குழுவின் வாசிப்பு நிலையின் கிடைக்கப்பெற்ற முடிவுகளாகும். இம்மாணவர்களிடையே வாசிப்பு நிலையை மேம்படுத்துவதற்கு எவ்வித அணுகுமுறைகளையும் கையாளப்படவில்லை. முதல் வாரம் மற்றும் இரண்டாம் வாரத்திற்கும் நடைப்பெற்ற ஆய்விற்கு பின்னர் இம்மாணவர்களிடையே தமிழ்மொழி

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 2 (2017), Pages 47-59 / ISSN: eISSN 2590-3691

வாசித்தலில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை என்பதனை இக்குறிவரைவு நிரூபனப்படுத்துகின்றது. அவ்வகையில் தமிழ்மொழி வாசித்தலில் நன்று நிலையில் உள்ள மாணவர்கள் நன்று நிலையிலும், நனிநன்று நிலையில் உள்ள மாணவர்கள் அதே நிலையிலும் உள்ளதை குறிவரைவு தெளிவுப்படுத்துகின்றது.





குறிவரைவு 6 : ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களின் முன்றாம் வாரம் வாசிப்பு அடைவுநிலை முடிவுகள்

குறிவரைவு 6 : மூன்றாம் வாரம் ஆய்வுக்குட்படுத்தப்பட்டக் குழுவின் பின்னறித் தேர்வின் முடிவுகள்

இக்குறிவரைவானது, ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களின் முன்னறித் தேர்வின் முடிவையும், பின்னறித் தேர்வின் முடிவையும் விவரிக்கின்றது. மாணவர் 1 நன்று என்னும் பகுப்பில் இருந்து நனி நன்று பகுப்பிற்கு பதொண்பது மதிப்பெண்களில் இருந்து மேலும் இரு மதிப்பெண்கள் பெற்று உயர்ந்துள்ளார். மாணவர் 2 நன்று என்னும் பகுப்பில் இருந்து நனி நன்று பகுப்பிற்கு அதே பதொண்பது மதிப்பெண்களில் இருந்து மேலும் இரு மதிப்பெண்கள் பெற்று உயர்ந்துள்ளார். மாணவர் 4 நனி நன்று நிலையில் தன்னை தக்க வைத்து இருபத்து இரண்டு மதிப்பெண்களில் இருந்து இருபத்து நான்கு மதிப்பெண்களைப் பெற்றுளார், மீதம் உள்ள மாணவர் 7 மற்றும் 9 தங்களின் நிலையை அதே பகுப்பில் தக்க வைத்துக் கொண்டனர். அவர்களில் மாணவர் 7 பதினைந்து மதிப்பெண்களில் இருந்து பதினேழு மதிப்பெண்களையும், மாணவர் 9 பன்னிரெண்டு மதிப்பெண்களில் இருந்து பதின்நான்கு மதிப்பெண்கள் பெற்று உயர்துள்ளனர். ஆக, மூன்றாவது வாரத்திற்குப் பின்னர் மாணவர்களின் வாசிப்பு நிலையில் நனி நன்று பகுப்பில் மொத்தம் மூன்று மாணவர்களும், நன்று பகுப்பில் மொத்தம் இரண்டு மாணவர்களும், திருப்தி குறைவு பகுப்பில் எந்த ஒரு மாணவர்களும் இல்லாதிருப்பதையும் அட்டவணை மற்றும் குறிவரைவு மூலம் அறிய முடிகின்றது.

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 2 (2017), Pages 47-59 / ISSN: eISSN 2590-3691




குறிவரைவு 7 : கட்டுக்குட்படுத்தப்பட்டக் மாணவர்களின் மூன்றாம் வாரம் வாசிப்பு அடைவுநிலை முடிவுகள்

குறிவரைவு 7 : மூன்றாம் வாரம் கட்டுக்குட்படுத்தப்பட்டக் குழுவின் பின்னறித் தேர்வின் முடிவுகள்

மேற்காணும் குறிவரைவு, மூன்றாம் வாரம் கட்டுக்குட்படுத்தப்பட்டக் குழுவின் வாசிப்பு நிலையில் இருந்து கிடைக்கப்பெற்ற தரவுகள் ஆகும். இக்குழு மாணவர்களிடையே ஆய்வாளர் வாசிப்பினை மேம்படுத்த எவ்வித அணுகுமுறைகளையும் கையாளவில்லை. ஆக மொத்தத்தில் முதல், இரண்டாம், மூன்றாம் ஆய்விற்கு பிறகு இம்மாணவர்கல் இடையே தமிழ்மொழி வாசித்தலில் எவ்வித மாறுபாடுகலும் ஏற்படவில்லை என்பதனைக் குறிவரைவு 4.7 உறுதி செய்கின்றது. அவ்வகையில் தமிழ்மொழி வாசித்தலில் நன்று பகுப்பில் உள்ள மாணவர்கள் யாவரும் அதே நிலையிலும், நனிநன்று பகுப்பில் உள்ள மாணவர்கள் அதே நிலையிலும் மாற்றம் காணது இருப்பதை அட்டவணையும் குறிவரைவும் உணர்த்தியுள்ளது.

## தொடர் ஆய்விற்கான பரிந்துரைகள்

ஆய்வாளர் தான் மேற்கொண்ட ஆய்விலிருந்து கிடைக்கப்பெற்ற தரவுகள் மற்றும் முடிவுகளின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு ஒரு சில பரிந்துரைகளை முன் வைக்க விரும்புகின்றார்.மலேசியாவில் தமிழ்மொழியைக் கற்பிக்கும் அனைத்துத் தொடக்க மற்றும் இடைநிலைப்பள்ளிகளில் இம்மாதிரியான தொழில் நுட்ப ஊடங்களைப் பயன்படுத்தி ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும்."நீயுஸ் மேக்கர்" (செய்தி தயாரிப்புச் செயலி) என்னும் வாசிப்புத் திறனை மேம்படுத்தும் அணுகுமுறை அனைத்துப் படிவங்களுக்கும் செயல்படுத்தப்பட வேண்டும்.

வாசிப்பில் ஏற்படும் அனைத்துச் சிக்கலுக்கும் இம்மென்பொருளை ஓர் அணுகுமுறையாகக் கொண்டு ஆய்வை மேற்கொள்ளலாம்.கல்வி அமைச்சுப் பள்ளியில் பணி புரியும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் பயிற்சி கல்லூரி மற்றும் பல்கலைகழகத்தில் பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்குத் தொழில் நுட்ப பாடத்தில் முன்னுரிமைக் கொடுத்து பயிற்சியும் அளிக்க வேண்டும். கல்வி அமைச்சுக் கலைத்திட்ட மேம்பாட்டு வாரியத்தோடு இணைந்து தமிழ்மொழி பாட நூலில் உள்ள தகவல்களைப் புத்தாக்கம் செய்து, அதனை இம்மென்பொருளின் வாயிலாகக் குறுந்தட்டு வடிவில் வழங்கி அதனை வாசிப்பு நேரங்களில் பயன்படுத்த பரிந்துரைக்க வேண்டும்.

**ஆய்வு முடிவுரை**

"நீயுஸ் மேக்கர்" (செய்தி தயாரிப்புச் செயலி) மூலம் படிவம் இரண்டு மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்த முடியும் என்பதே இவ்வாய்வின் முடிவாகும். பல புதிய உத்திகளையும் தொழில் நுட்பங்களையும் ஆசிரியர் மாணவர்கள் இடத்தில் அறிமுகப்படுத்துதல் வேண்டும், இல்லையேல் மாணவர்களுக்கு கற்றல் கற்பித்தலின் பால் சலிப்பு ஏற்பட்டுவிடும். இச்சிக்கலைக் கண்டுக் கொள்ளாமல், எந்த ஒரு அணுகுமுறைகளையும் பின்பற்றி பயிற்சி அளிக்காமல் இருந்தால் அம்மாணவர்கள் மேன்மேலும் வாசித்தலில் சிக்கல்களை எதிர்நோக்குவார்கள் என்பதில் எந்த ஒரு ஐயமும் இல்லை. மாணவர்களின் சுயமதிப்பு மேம்பட்டத்துடன், அவர்களின் தன்முனைப்பும் ஆர்வமும் இவ்வாய்வின் வழி மேம்பட்டுள்ளது. ஆக "நீயுஸ் மேக்கர்" (செய்தி தயாரிப்புச் செயலி) என்னும் மென்பொருள் மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்தும் என்பது ஆய்வாளரின் உறுதியான கருத்தாகும்.

எந்த ஒரு சமுதாயத்திலும் காலப்போக்கில் புதிய தேவைகள் எழுவதும், அவற்றை நிறைவு செய்யும் வகையில் அச்சமுதாய அமைப்பிலும் செயற்பாடுகளிலும் மாற்றங்கள் ஏற்படுவதும் இயற்கையாகும். நமது இந்திய சமுதாயமும் இதற்கு விதிவிலக்கன்று. சமுதாய மாற்றங்களுடன் இணைந்து கல்வி அமைப்பு மாறுவதுடன், இத்தகைய மாற்றங்களைத் தோற்றுவித்து இளம் தலைமுறையினரிடம் பரப்புவது கல்வியின் செயற்பாடாகின்றது. இந்நோக்கத்தைக் கருத்தில் கொண்டு ஆசிரியர்களது பயிற்சி அமைப்பிலும், அவ்வபோது தேவையான மாற்றங்கள் எழ வேண்டும் என்பது ஆய்வாளரின் கருத்தாகும்.

**Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)**
**Volume 1- Issue 2 (2017), Pages 47-59 / ISSN: eISSN 2590-3691**

**மேற்கோள் நூல்கள்:**

1. தேசியக் கல்வித் தத்துவம், கல்வித் திட்ட மேம்பாட்டு பிரிவு, கல்வி அமைச்சு,1988
2. மலேசியக் கல்வி அமைச்சு. (2012) மலேசியக் கல்வி மேம்பாட்டு திட்டம் 2013-2025 (BLUE PRINT), கல்வி அமைச்சு, புத்ரா ஜெயா.
3. கணபதி, வி. (2007). *நற்றமிழ் கற்பிக்கும் முறைகள்.* சென்னை: சாந்தா பப்ளிஷர்ஸ்.
4. சுப்புரெட்டியார், ந. (2008). *தமிழ்ப் பயிற்றும் முறை.* சென்னை: மெய்யப்பன் பதிப்பகம்.
5. Farahan Hani. (2000*), Kajian mengenai tahap kemahiran membaca pelajar tingkatan tiga*. Universiti Malaya, Kuala Lumpur.